பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

UTHAYAN

சுடர்: 5 பிரமோதூத ஹூ ஐப்பசி மீ 10 உ சனிக்கிழமை (27 - 10 - 1990) ஹிஜ்ரி 1410 ற. ஆகிர் 07 கதிர்: 234

# ஸ்ரீலங்கா பிரதமருக்கு எதிராக பாரிஸ் நகரில் ஆர்ப்பாட்டம்!

## சிங்களவர், தமிழர் திரண்டு கோஷங்களை எழுப்பினர்

பாரிஸ், அக்டோபர் 27

பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் இலங்கைக்கு உதவி அளிக்கும் நாடுகளின் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்ற போது, அக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற ஸ்ரீலங்காப் பிரதமர் டி. பி. விஜயதுங்கவுக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

கூட்டம் நடைபெற்ற கட்டடத்தின் முன்னால் சிங்களவர்களும், தமிழர்களும் பெருமளவில் கூடிநின்று கோஷங்களை எழுப்பினர்.

இலங்கையில் சிங்களவர்கள், தமிழர்கள் மீது மனித உரிமை மீறல்களை இலங்கை அரசு மேற்கொண்டு வருவதாகவும் - இலங்கை அரசுக்கு நிதி உதவி வழங்கக்கூடாது என்றும் — ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதமரும் நிதி அமைச்சருமான டி. பி. விஜேதுங்காவை, கூட்டத்தில் இருந்து வெளியேறும்படியும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குரல் எழுப்பினர்.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் குறித்து கூட்டத்தில் கலந்து கொண்ட ஸ்ரீலங்காவுக்கு உதவும் நாடுகளின் பிரதிநிதிகள் கவலை தெரிவித்தனர்.

மனித உரிமைகளைப் பே[illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 4 துறவிகள், 11 கன்னியாஸ்திரிகள் வயாவிளானில் பணயக் கைதிகள்?

யாழ்ப்பாணம், அக். 27

வயாவிளான் தோலகட்டி ஆச்சிரமத்தில், கன்னியாஸ்திரியர் மடத்தைச் சேர்ந்த 4 துறவிகளும், 11 கன்னியாஸ்திரிகளும் ஸ்ரீலங்கா படையினரால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். ஆயர் இல்ல வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

வயாவிளான் கன்னியாஸ்திரியர் மடத்தில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

வயாவிளான் உத்தரிய மாதா தேவாலயத்தில் பூசைகள் நடைபெறுவதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## கட்டுவனில் நேற்றும் மோதல்

தெல்லிப்பழை, அக். 27

கட்டுவன் சந்தியில் இருந்து மல்லாகம் தெல்லிப்பழை ஆகிய பகுதிகளை நோக்கி நேற்று முன்னேற முயன்ற படையினரை, விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கி பின்வாங்கச் செய்தனர்.

அப்பகுதிகளை நோக்கி அடுத்தடுத்து ஷெல்களை ஏவிக்கொண்டு படையினர் முன்னேற முயன்றனர் எனினும் அது கைகூடவில்லை.

துப்பாக்கி வேட்டுக்களாலும், ஷெல் சத்தத்தாலும் அப்பகுதிகள் அதிர்ந்தபடி இருந்தன. (ஓ 3-5-68)

### நிலைமையை நேரில் கண்டறிய

## நோர்வே, பிரிட்டிஷ் அதிகாரிகள் யாழ். வருகை

யாழ்ப்பாணம், அக் 27

நோர்வே, பிரிட்டன் ஆகிய நாடுகளின் தொண்டர் நிறுவனங்களைச் சேர்ந்த உயர் மட்ட அதிகாரிகள் மூவர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தினதும் குடாநாட்டில் ஏனைய பகுதிகளினதும் தற்போதைய நிலைமை குறித்து அறிந்து செல்வதற்கே அந்த அதிகாரிகள் வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட நாடுகளின் கொழும்பு தூதரகங்கள் கேட்டுக்கொண்டதை அடுத்தே

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 4 ஆம் திகதி வரை நிவாரணம் பெற கால எல்லை நீடிப்பு

யாழ்ப்பாணம், அக். 27

தற்சமயம் நடைமுறைப் படுத்தப்படும் அகதிகளுக்கான மூன்றாம்கட்ட மற்றும் தொழில், வருமானம் இழந்தவர்களுக்கான இரண்டாம் கட்ட நிவாரணங்களையும், ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுபவர்களின் இரண்டாம்கட்ட விநியோகத்தையும் அடுத்தமாதம் 4 ஆம் திகதிவரை மேற்கொள்ளலாம்.

நேற்று செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

இந்த நிவாரண விநியோகத்தை நேற்று வெள்ளிக்கிழமையுடன் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று [illegible] அறிவிக்கப்பட்டிருந்தது.

நேற்றையதற்[illegible] அரச அதிபர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பணம் வந்தபின்பே ஓய்வூதிய வவுச்சர்கள் அனுப்பப்படும்

யாழ்ப்பாணம், அக் 27

செப்டம்பர் மாதத்துக்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் நேற்று யாழ். செயலகத்துக்கு வந்து சேர்ந்தன. ஆனாலும் பணம் கிடைத்த பின்பே வவுச்சர்கள் உரியவர்களுக்கு அனுப்பப்பட இருக்கின்றன.

செயலக ஓய்வூதியக் [illegible] அதிகாரி மேற்கண்ட[illegible] தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் வவுச்சர்கள் மட்டுமே அனுப்பப்பட்டுள்ளன. ஓய்வூதியத்துக்குரிய கட்டு நிதி வங்கிகளுக்கு அனுப்பப்படவில்லை.

கட்டுநிதி கிடைத்து, வங்கிகளில் ஓய்வூதியம் வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்[illegible] அனுப்பப்படும் என்று அந்த அதிகாரி சொன்னார். (இ 3)

## மிதிவெடிகள் கவனம்!

புளியங்கூடல், அக். 27

சுரம்பொன், ஒழுவில் பொன்னாச்சி கடைச் சந்தி ஆகிய பிரதேசங்களில் இராணுவத்தினர் மிதிவெடிகளை வைத்திருப்பதால் அப்பகுதிகளுக்குள் எவரையும் உட்பிரவேசிக்கவேண்டாம் எனக் கேட்கப்பட்டுள்ளது.

(ஒ ரி)

## வீடுகள் பல குண்டு வைத்து தகர்ப்பு

தெல்லிப்பழை, அக். 27

குரும்பசிட்டி, வயாவிளான், கட்டுவன் ஆகிய பகுதிகளில் நேற்றுப் படையினர் வீடுகளைக் குண்டுவைத்துத் தகர்த்துத் தரைமட்டமாக்கியதாக அறியவருகிறது.

தகர்ந்த இடிபாடுகளை "புல்டோசர்" கள் கொண்டு கரையை மட்டமாக்கும் வேலைகளிலும் படையினர் ஈடுபட்டிருந்தனர் எனவும் தெரியவந்தது.

வீடுகளைக் குண்டுவைத்துத் தகர்த்த சத்தம் இந்தப் பகுதியை அதிரவைத்தது.

(ஓ-3-5)

## ஆனையிறவில் மோதல்

யாழ்ப்பாணம், அக். 27

நேற்று முன்தினம் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து கிளிநொச்சிப் பக்கமாக இராணுவத்தினர் முன்னேற முயன்றபோது விடுதலைப் புலிகள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

தாக்குதலை அடுத்து முகாமுக்குள் சென்ற படையினர் அங்கிருந்து பத்துக்கு மேற்பட்ட ஷெல்களை முகாமுக்கு வெளியே ஏவினர். (உ)

## பதவியாவில் ஊர்காவலர் பலி

யாழ்ப்பாணம், அக். 27

திருகோணமலை மாவட்டம் பதவியாவில் நேற்று ஊர்காவல் படைவீரர் ஒருவர் விடுதலைப் புலிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவரிடமிருந்து ஷொட்கன்—1, தோட்டாக்கள் —6 மிதிவெடிகள்— 2 ஆகிய வைகள் தங்களால் கைப்பற்றப்பட்டதாக விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## 2 சிப்பாய்கள் கால் இழப்பு

யாழ்ப்பாணம், அக். 29

மட்டக்களப்பு ம வட்டம் பெரியகல்லாறில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் வைத்த மிதிவெடியில் சிக்கி இராணுவத்தினர் கால்களை இழந்ததாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## முல்லைத்தீவில் தாக்குதல்

நேற்று முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து சிலாவத்தையைநோக்கி முன்னேற முயன்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து படையினர் பின்வாங்கி முகாம் திரும்பினர்.

இவ்வாறு பின்வாங்கிய படையினர் பலர் ஏற்கனவே விடுதலைப் புலிகள் வைத்திருந்த மிதிவெடிகளில் சிக்கி காயமடைந்தனர்

—விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத் தகவலைத் தெரிவித்தன. (உ)

## மேனகா ராஜினாமா

புதுடில்லி, அக். 27

இந்திய மத்திய சுற்றுப்புறச் சூழல் இணை அமைச்சர் திருமதி மேனகா காந்தி நேற்று தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டார்.

பெரும்பான்மைப்பலத்தை இழந்த நிலையில்தொடர்ந்து நீடிக்க ஜனதாதள் அரசுக்கு தார்மீக உரிமை கிடையாது என்று மேனகாகாந்தி பின்னர் செய்தியாளரிடம் சொன்னார்.

பிரதமர் பதவியில் இருந்து திரு. வி. பி சிங்கும் விலகவேண்டும் என்றும் திருமதி மேனகா காந்தி கேட்டுக்கொண்டார். [உ-எ]

## சந்திரசேகரை பிரதமராக்க முயற்சி

புதுடில்லி, அக். 27

திரு. வி பி. சிங்குக்குப் பதில் திரு. சந்திரசேகரை ஜனதாதள் கட்சியில் பிரதமராக தெரிவு செய்யும் முயற்சி இடம்பெற்று வருவதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. [உ-எ]

## ஆஸ்பத்திரியில் திருட்டு

தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரி, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியவற்றில் இருந்து பெறுமதியான பல பொருள்கள் மாயமாய் மறைந்து போய் விட்டதாகத் தெரியவருகிறது.

ஆஸ்பத்திரிக் கதவுகள் உடைக்கப்பட்டு பெறுமதியான மருந்துவகைகள், உட்பட முக்கிய பொருள்கள் திருடப்பட்டுள்ளன. [ஓ-5-3]

## அயோத்தியில் ஊரடங்கு

இந்தியாவில் சர்ச்சைக்குரிய இடமான அயோத்தியில் நேற்று இரவு 7 மணி முதல் இரவு நேர ஊரடங்கு திடீரென அறிவிக்கப்பட்டது. [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு உண்டு

Work Bike மூன்று சில்லு வைசக்கிள் வண்டி பாரம் ஏற்றக் கூடியது ''England Make'' தொடர்பு: கா. சிவகுமார், உடையார்ஒழுங்கை, கொக்குவில் (14519)

## கறுப்பு வெள்ளை படம்

12 X 10 கறுப்பு வெள்ளை படம் பெருப்பித்து கொடுக்கப்படும் சித்திர கலா போட்டோ கிறாஸ், நம்3, செட்டித்தெரு, ஒழுங்கை, நல்லூர். (14566)

## பூஜைக்காக வாழும் பூவை

மீரா வெளியீடு கே. எஸ். ஆனந்தன் எழுதியது குடும்பத்தில் தோன்றும் அனைத்துப் புயலுக்கும் அசையாது நிற்கும் பெண்ணொருத்தியின் புனிதமான வாழ்வைச் சித்தரிக்கும் கதை 40/ ரூபா தூர்க்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னாகம். பிக்பென்ஸ் (B) கிளிநொச்சி, திருக்கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர். (14557)

## கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சகல தரப்பினருக்கும் தனிப்பட்ட முறையில் உங்கள் வீடுகளுக்கு வந்து ஆரம்ப அறிவிலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். ஜெயராஜா, 204, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (14551)

## போட்டோபிரதிகள்

தரமான போட்டோ பிரதிகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள் 'மண்டேலாரேடர்' 550/8A கே. கே. எஸ். வீதி, [சட்டநாதெரு சந்திக்கு அருகாமையில்] 256/A, பருத்தித்துறை வீதி. (தேரடி முன்பாக) நல்லூர் யாழ்ப்பாணம். (14550)

## இடமாற்றம்

இல. 66 பெரிய கடை யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கிய அம்பிகாவதி பென்சி கூட்ஸ். வாடிக்கையாளரின் பாதுகாப்பு கருதி 54, அம்மன் வீதி. (வீரமாகாளி அம்மன் கோவில் அருகாமை) நல்லூர் எனும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது. (14526)

## குணமடைந்த மனநோயாளர்

பண்டத்தரிப்பு, அக். 27

குணமடைந்துள்ள 5 மனநோயாளர்களை அழைத்துச் செல்லுமாறு சங்கானை அரசினர் வைத்திய சாலையின் வைத்திய அதிகாரிகள் அவர்களின் உறவினர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தெல்லிப்பழை ஆஸ்பத்திரி சங்கானைக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் சங்கானை அரசினர் வைத்தியசாலையில் பெரும் இடநெருக்கடி நிலவுவதாகக் கூறப்படுகிறது.

குணமடைந்துள்ள ஐவர் பெயரும் வருமாறு:

எம். புவனேஸ்வரி [கிளிநொச்சி], வி. பரமநாதன் [சாவகச்சேரி], திருமதி சி. சிவபாக்கியம் [மிருசுவில்], லிங்கையா நாகேஸ்வரி [புளியம் குளம்], பூபாலசிங்கம் குசலகுமாரி [வேலணை]. (இ - 120)

## பணம் பெறமுடியாது திண்டாட்டம்

வட்டுக்கோட்டை, அக். 27

யாழ். மாவட்டத்திலுள்ள பல குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வெளிநாடுகளிலிருந்து கிடைத்த பணத்தை வங்கிகளிலிருந்து பெறமுடியாது திண்டாடுகிறார்கள். (இ-161)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் உயர் திரு

**சண்முகம் வேலாயுதபிள்ளை**

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

ஆண்டவன் படைப்பு: 24 - 06 - 1927
அநியாய அழிப்பு: 27 - 10 - 1987

அன்பின் சிகரமாய் அறிவின் சுடரொளியாய் பாசத்தின் பிறப்பிடமாகவும் இலக்கண இலக்கிய வித்தகராகவும் இருந்து எம்மையெல்லாம் சீரும் சிறப்பாகவும் வாழவைத்த குல விளக்கே அமைதிகாக்கும் போர்வையில் வந்த இந்திய அட்டூழியப்படை சிங்கம் போல் ஊரில் உலா விவந்த தங்கள் இன்னுயிரைப் பறித்தனரே. குடும்பத்தின் ஒளிவிளக்கு நீங்கள் மறைந்தாலும் எங்கள் உள்ளமதில் என்றும் அணையாத சுடரொளியாகப் பிரகாசித்துக்கொண்டே இருப்பீர்கள்.

தங்கள் ஆத்மா சாந்தி அடைவதாக!

தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (14458)

# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

**கணபதிநாதன் சபாநாதன்**

தோற்றம்: 11 - 07 - 1954
மறைவு: 07 - 11 - 1989

திதி: 27 - 10 - 1990

அன்பின் உறைவிடமாய் பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து, எங்களையெல்லாம் ஆழ்த்த துயரத்தில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

உம் பிரிவால் துயருறும்:
பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனன்மார், மைத்துனிமார்,
பெறாமக்கள், மருமக்கள்.

177. 2ஆம் குறுக்குத் தெரு.
யாழ்ப்பாணம். [14564]

# முதலாம் ஆண்டு அஞ்சலி



**இளையதம்பி நாகலிங்கம்**

(இளைப்பாறிய றப்பர் தோட்ட தொழிற்சாலை அதிகாரி)

தோற்றம்: 03 - 04 1908
மறைவு: 07 - 11 - 1989

திதி: 27 — 10 — 1990

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்:

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பூனாறிமரத்தடி,
கொக்குவில். [14530]

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவு சங்கம்

# தகவல் சேகரிப்பு நிலையம்

அண்மையில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக எமது பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமுகமாக **'தகவல் சேகரிப்பு நிலையம்'** ஒன்று தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த நிலையத்தில், எமது பகுதியில் இராணுவ நடவடிக்கையின் போது அகப்பட்டவர்கள், காணாமற்போனவர்கள், இறந்தவர்கள் வேறு விதமான இழப்புக்கு, பாதிப்புக்கு உள்ளானோர் பற்றிய விபரங்களைப் பதிவு செய்து கொள்ளலாம் கிடைக்கப் பெறும் தகவல்களைக் கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்.

சி. சிவமகாராஜா,
தலைவர்.

தெல்லிப்பழை பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
25 - 10 - 1990 [சி-5344]

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**திரு. கந்தப்பு சோமசுந்தரம்**

(இளைப்பாறிய அதிபர் உடுப்பிட்டிச் சைவப்பிரகாச- வித்தியாசாலை)

தோற்றம்: 05 - 09 - 192
மறைவு: 30 - 10 - 1987

திதி: 27 - 10 - 1990

நீதி, நேர்மை, கடமை, கண்ணியம் யாவும் ஒருங்கே அமைந்த பெருந்தகாய், உம்மைப் பிரிந்து மூன்றாண்டு கழிந்தாலும் மாறாத நினைவும் ஆறாத கவலையும் எம்மை வாட்டுகிறது எங்கள் சீரான குடும்பம் சீரற்றுப்போனது. மீகாமனில்லாத மரக்கலமானோம். தோன்றாத்துணையாய் இருந்து எங்களை வழிநடத்துங்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

27-10-90 இல் அன்னாரின் இல்லத்தில் நடக்கும் குரு பூசையில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மனைவி திருமதி சோமசுந்தரமும், மக்கள்,
மருமக்கள், மைத்துனர்மார்,
பேரப்பிள்ளைகளும்.

''சாந்தி அகம்''
உடுப்பிட்டி.

(14567)

# ஓராண்டு நினைவஞ்சலி



**குமரகுருநாதன் பரந்தாமன்**

(யா / தமிழ்ச் சந்தைபா வித்தியாசாலை மாணவன்)

பூவுலகம்: 25 - 11 - 1976
விண்ணுலகம்: 06 - 11 - 1989

திதி: 27 — 10 — 1990

பன்னிரு சூரியருள் ஒருங்குடன் உதித்து
பரதினை பார் புகழ் எய்தினாய்
குறு குறு நடையுடன் வீர நாயகனாய்
முக மலர்வுடனே பாலனாய் திகழ்ந்தாய்
அன்புடன் பேசி மழலைகள் சிந்தி
கல்வியில் சூரனாய் புகழுடன் மிளிர்ந்தாய்
நகர் பல சென்று பரிசில்கள் பெற்று
பூ வென மலர்ந்து புகழ் பல பரப்பி
ஞாலத்தி வென்றும் அழிவுறா இடம் பிடித்து
நித்திய மலராய் தினமுன் நினைவால்
எம் மனம் வாட
மேலோனே அவனியில் மாந்தர் உனைப்பாட
நோயெனும் வடிவில் கூற்றுவன் வந்தான்
பன்னிரு புகழையும் மேதினியில் விலக்கி
விண்ணுலகை உன தாக்கினாய்

உம் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவுத் துயர் தாங்காது வாடும்:
அப்பா, அம்மா,
அண்ணாமார், அக்காமார், அத்தான்மார்,
அண்ணிமார், சித்தி, சித்தப்பா,
மருமக்கள், அம்மம்மா, அம்மப்பா,
உறவினர்.

சங்குவேலி வடக்கு,
தம்பஹள, மானிப்பாய். [14568]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### நெருக்குதல் கொடுங்கள்!

ஸ்ரீலங்காவில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. பொது மக்கள் நெருங்கி வாழும் பகுதிகளில் விமானக்குண்டு வீச்சுக்கள் நடத்தப்படுகின்றன. அவை தொடருமானால் இலங்கை அரசுக்கு வழங்கும் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை நிறுத்தி விடுவோம். இவ்வாறு ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் எச்சரித்துள்ளன.

சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் இயக்கம் போன்ற அரச சார்பில்லாத பல நிறுவனங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்துச் சுட்டிக்காட்டி குற்றஞ்சாட்டி, தொடர்ச்சியாகக் கண்டனம் தெரிவித்து வருகின்றன. ஆனால் அரசாங்கம் அந்தக் குற்றச்சாட்டை மறுத்துவிடுவது வழக்கம். குற்றஞ்சுமத்தும் நிறுவனங்களுக்கு களங்கம் உண்டு பண்ணும் விதத்தில், அவற்றைப் பொய்யர்கள் என்றும் பயங்கரவாதிகள் என்றும் நாமஞ்சூட்டி விவகாரத்தைத் திசை திருப்பி விடுவார்கள் இலங்கை அமைச்சர்கள்.

அதற்குக் காரணமும் உண்டு. சர்வதேச மனிதாபிமான நிறுவனங்களின் அறிக்கைகளை ஆராய்ந்து அவற்றின் உண்மையைக் கண்டு, ஸ்ரீலங்காவுக்கு உறைக்கும் விதத்தில் அடி போடுவதற்குச் சர்வதேச சமூகம் இதுவரை முன் வந்ததில்லை. மனித உரிமைமீறல், இனஒழிப்பு ஆகியவற்றை நிறுத்துமாறு கனதியான முறையில் அழுத்தமும், அமுக்கமும், நெருக்குதலும் கொடுக்க உலக நாடுகள் தவறிவிட்டன.

அதனால் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் எச்சரிக்கை ஒரு சிறிய திருப்பம் எனலாம். ஆனால் அவை வெறும் எச்சரிக்கையோடு நில்லாமல் உதவிகளை நிறுத்தி ஸ்ரீலங்கா அரசைத் தண்டிக்க வேண்டும் அதனைப் பின்பற்றி உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, காமன்வெல்த் போன்றவையும் ஸ்ரீலங்கா செய்யும் குற்றங்களுக்காக அதனைத் தண்டிக்க முன்வரவேண்டும். தங்களிடமிருந்து பெறும் பணத்தைக் கொண்டுதான் ஸ்ரீலங்கா அரசு இன அழிப்பையும், மனித உரிமை மீறல்களையும் செய்கிறது என்பதை நன்றாக உணரட்டும்.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்கு என்று உலக வங்கியிடம் இருந்து பணம் பெற்று அதனை ஆயுதக் கொள்வனவு, படைப் பயிற்சி என்பனவற்றுக்குச் செலவிட்டதான மோசடிக் குற்றச்சாட்டுகளும் ஸ்ரீலங்கா மீது உண்டு என்பதை சகல உலக நாடுகளும், நீதி வழங்கும் சர்வதேச நிறுவனங்களும் மறந்து விடக்கூடாது.

தான் புரியும் குற்றங்களுக்குத் தண்டனை இல்லை என்ற ஸ்ரீலங்கா அரசின் இறுமாப்பை நீக்கி அதனை வழிக்குக் கொண்டு வர, மனிதாபிமானத்தில் அக்கறை உணர்வுள்ள ஒவ்வொரு வெளிநாடும் முன் வரவேண்டும்.

### இறந்த பல்கலை யாழ். பிராந்திய நிலையம்

யாழ்ப்பாணம், அக். 27

இறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்திய நிலையத்தின் சகல பீடங்களிலும் விரிவுரைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சகல பீடங்களையும் சேர்ந்த மாணவர்களையும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நிலையத்தில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ - 3)

### முதலுதவி சிகிச்சைப்பெட்டி

யாழ்ப்பாணம், அக். 27

பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு அவசியம் தேவையான முதலுதவிச் சிகிச்சை பெட்டிகளை யாழ் செஞ்சிலுவைச்சங்கம் விற்பனை செய்து வருகிறது. (இ - 3)

# பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பித்தோர்

# செயலகத்துக்கு தினமும் அலைச்சல்

## இதுவரை கொழும்பிலிருந்து ஒன்றும் வரவில்லை

யாழ்ப்பாணம், அக். 27

யாழ். செயலக பாஸ்போர்ட் பிரிவில் பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பித்தவர்கள் தினமும் செயலகத்துக்கு வந்து அலைகிறார்கள்.

செயலக பாஸ்போர்ட் பிரிவில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டு கொழும்பில் இருந்தே பாஸ்போர்ட்டுகள் இங்கு அனுப்பப்படுவது நிரந்தரமான நடைமுறை ஆகும்.

கடந்த ஏப்ரல் மாதம் யாழ். செயலகத்தில் பாஸ்போர்ட் பிரிவு இயங்க ஆரம்பித்த நாள்முதல் கடந்த ஜூலை 18 ஆம் திகதிவரை 700 பேர்வரை பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பித்திருந்தனர்.

இவர்களில் ஒருவரது பாஸ்போர்ட் கூட கொழும்பில் இருந்து இன்னும் அனுப்பப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-100)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டோர் விவரம்

தென்மராட்சி, அக். 27

கடந்த புதன்கிழமை இடம் பெற்ற சாவகச்சேரி சந்தை குண்டுவீச்சில் காயமடைந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில அனுமதிக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

ரி. திலீப்குமார்- (வயது11) சாவகச்சேரி, வே. விஜயகுமார்- (வயது 30) கச்சாய் வீதி, கே. கதிர்காமு- (வயது 57) சாவகச்சேரி, ரீ. சந்திரன்- (வயது 24) சங்கத்தானை, சி. தேவராசா- (வயது 26) சுன்னாகம், ஐ. சிவலோகநாதன்- (வயது 21) சங்கத்தானை, கே. கனகசபாபதி- (வயது 28) சங்கத்தானை, ரி. நடேஸ்வரன்- (வயது 29) சங்கத்தானை, ஆ. இராஜா (வயது 25) சங்கத்தானை, எம். திலகராஜ் [வயது 24] சாவகச்சேரி.

அ. சின்னம்மா- [வயது 58] மட்டுவில், எஸ். சத்தியதேவன்- [வயது 22] சாவகச்சேரி, சி. சிவசத்தியராஜ்- [வயது 17] மட்டுவில், த. வல்லிபுரம்- [வயது 24] சாவகச்சேரி, திரவியச்செல்வம் [வயது 30] சரசாலை, செ. சிவராசா- (வயது 30) சரசாலை, எம். பூபாலசிங்கம் [வயது 42] மட்டுவில் வடக்கு, எஸ். செல்வரத்தினம்- [வயது 27] மீசாலை, எஸ். நந்தகுமார் [வயது 19] கொடிகாமம்.

இந்த குண்டு வீச்சின் போது தலைதுண்டிக்கப்பட்ட நிலையில் இறந்தவர் வியாபாரியான நாவாந்துறையைச் சேர்ந்த கறுப்பையா பழனி [வயது 60] என்று அடையாளம் காணப்பட்டது.

குண்டு வீச்சின் போது இவர் மரம் ஒன்றின் பின்னால் மறைந்து நின்றார் என்று கூறப்படுகிறது. [இ117]

# மெழுகுதிரி வெளிச்சத்தில் செயலக ஊழியர் கடமை

மழை இருட்டுக்காரணமாக யாழ். செயலக ஊழியர்கள் நேற்று மெழுகுதிரி வெளிச்சத்தில் கடமை ஆற்றினர்.

இத்துடன் நேற்றுப் பெய்த மழை காரணமாக செயலகத்தின் பல பிரிவுகளில் வெள்ளம் நின்றதையும் காணக்கூடியதாக இருந்தது. (இ - 100)

# வங்கிகளில் அலுவல்களை ஆரம்பிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், அக். 27

காசோலை மாற்றல், பரிமாறல் ஆகிய அலுவல்களை ஆரம்பிக்குமாறு, யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து வங்கிகளிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கம் யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து வங்கிகளின் முகாமையாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள மகஜரில் மேற்கண்டவாறு கேட்டுள்ளது.

வங்கிகளில் அலுவல்கள் சரிவர நடக்காததால் ஒப்பந்தக்காரர்கள் மேற்கொண்ட வேலைகள் ஸ்தம்பித நிலையில் உள்ளதாகவும் அதனால் வேலைத் தொழிலாளர்களின் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஆலயங்கள், வீடுகளிலும் வகுப்புகள் நடத்த வேண்டும்

## கல்விப் பணிப்பாளர் கோரிக்கை

யாழ். மாவட்டத்தில் பாடசாலைகள் இயங்க முடியாத சூழ்நிலை இருக்கும் பகுதிகளில் அதிபர்கள், தமது பாடசாலை ஆசிரியர்களின் உதவியுடன் ஆலயங்களிலும், வீடுகளிலும் வகுப்புக்களை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்.

பாடசாலைகளின் இன்றைய நிலை குறித்து கல்விப் பணிப்பாளர் உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

மாணவர்கள் இழந்த கற்பித்தல் நாட்களை ஈடுசெய்யும் வகையில் 10 வாரங்களில் போதிக்கத்தக்க பாடவிதானம் ஒன்று தயாரிக்கப்பட்டு, கைநூல் வடிவில் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட இருக்கிறது.

அந்தக் கைநூலை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களுக்கு போதனைகளை நடத்தி அடுத்த பெப்ரவரிக்கு முன்பாக பரீட்சையை நடத்த வேண்டும் என்றார். (ஒ-3)

# ஜே. வி. பியைப் போன்று புலிகளை அடக்கிவிட முடியாது

## நாடாளுமன்றத்தில் சிறிமா

கொழும்பு, அக். 27

தென்பகுதியில் ஜே. வி. பி இயக்கத்தினரை அடக்கியது போன்று விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் அடக்கி விட முடியாது. இதனை அரசு உணர்ந்து கொள்ளவேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவி திருமதிசிறிமாவோ பண்டாரநாயக்கா கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவசரகால நீடிப்புப்பிரேரணை மீதான விவாதத்தை திருமதி பண்டாரநாயக்கா எதிர்க்கட்சித்தரப்பில் முடித்து வைத்துப் பேசினார்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஆட்கள் கடத்தப்படுவது, கடத்தப்பட்டவர்கள் காணாமற்போவது போன்ற செயல்கள் இன்னும் இடம் பெற்று வருகின்றன என்றும் திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

அரசு தரப்பில் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா பேசுகையில், வடக்கு-கிழக்குபற்றி உண்மையான தகவல்களையே அரசாங்கம் வெளியிட்டு வருகிறது என்றார்.

சுதந்திரக்கட்சி எம். பி. திரு. ஜே. பி. இரத்னாயக்கா பேசுகையில், வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமாயின், பொறுப்பான அமைப்புகளுடன் அரசு பேச்சுக்களை நடத்த வேண்டும் என்றார்.

[illegible] எம். பி. டிக்ஸன் [illegible] பேசுகையில் —

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு நாடாளுமன்றம் மூலமே காணப்பட வேண்டும். சர்வகட்சிமாநாடு மூலம், காணப்படக்கூடாது என்று சொன்னார்.

வடக்கு - கிழக்கு மாகாண இராணுவ நடவடிக்கைகளின் போது காணாமற் போனவர்கள் குறித்து அரசு விசாரணை நடத்த வேண்டும் என்று ஈ. பி. ஆர். எல். எப், எம். பி. சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

மக்கள் ஐக்கிய முன்னணி எம். பி. தினேஷ் குணவர்த்தனா பேசுகையில், காணாமற் போனவர்கள் குறித்து விசாரணை நடத்தி, அவர்களுக்கு என்ன நடந்துள்ளது என்பதையும் அரசு வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

விவாதம் தொடர்ந்து நடைபெறுகிறது. (இ - எ)

### பஜனை வழிபாடு

குருநகர், அக். 27

நாட்டில் அமைதியும், தமிழ் மக்களின் சுபீட்சமும்வேண்டி யாழ் திருமறைக் கலாமன்றம் இன்று சனிக்கிழமை மாலை 4மணிக்கு பஜனை வழிபாடு ஒன்றை அராலி புனிதயூதாதேயு ஆலயத்தில் நடத்த உள்ளது. (இ-51)

### அமோனியா மட்டுமே வடக்குக்கு!

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு உரம் விநியோகிக்க ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி யூரியா பசளை அம்பாறை, திருமலை ஆகிய மாவட்டங்களுக்கு அனுப்பப்படும் என்றும் —

அமோனியா கலந்தபசளை மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் வடக்கு மாகாணத்துக்கும் அனுப்பப்படும் என்றும் — அமைச்சரவை தீர்மானித்திருக்கிறது. (உ-எ)

### 8 மணி நேர வேலைத்திட்டம்

அரச மருத்துவ மனைகளில் பணிபுரியும் சிற்றூழியர்களுக்கு எட்டுமணிநேர வேலைத் திட்டம் ஒன்றை அரசாங்கம் எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதி முதல் அமுல் நடத்த இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

### ஊர்காவல் படையில் சேரும்

# 2,000 தமிழ் இளைஞருக்கு ஒரு மாத ஆயுதப் பயிற்சி

கொழும்பு, அக். 27

கிழக்கு மாகாணத்தில் ஊர்காவற்படையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ள 2 ஆயிரம் தமிழ் இளைஞர்களுக்கு வடக்கு—கிழக்கு மாகாணத்துக்கு வெளியே வைத்து ஒரு மாத கால ஆயுதப்பயிற்சி வழங்கப்பட இருப்பதாக கொழும்புத் தகவல் தெரிவிப்பதாக ஏஜென்சிச் செய்தி ஒன்று தகவல் வெளியிட்டது.

ஊர்காவற்படைக்குத் தமிழ் இளைஞர்களின் பெயர்ப்பட்டியலை கொடுக்க முன்னர் புளொட் இயக்கமே முன் வந்தது என்றும்—

இப்போது அந்த நிலை மாறி, விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் அமைப்புக்கள் அனைத்தும் பெயர்ப்பட்டியல்களை அளிக்க முன்வந்துள்ளன என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### மேஜர் ஹென்றி வீரமரணம்

யாழ்ப்பாணம், அக். 27

கடந்த திங்களன்று மாவிட்டபுரம் பகுதியில் இடம் பெற்ற மோதலில் காயமுற்ற விடுதலைப்புலிகள் இயக்கப் போராளியான மேஜர் ஹென்றி வீரமரணமடைந்தார்.

செவ்வாயன்று காயமடைந்த சேகரன் என்ற போராளியும் வீரமரணமடைந்தார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த விமானங்கள் வாங்க 110 கோடி ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, அக். 27

புதிய யுத்த விமானங்களை வாங்குவதற்காக விமானப் படைக்கு 110 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை விமானப் படையின் உயர் அதிகாரிகளில் ஒருவரான ஏயர் மார்ஷல் ரி டி. எஸ். குணவர்த்தனா வெளியிட்டிருக்கிறார்.

இவரே வடக்கு-கிழக்குப் பிரிவுக்குப் பொறுப்பான விமானப்படைத் தளபதியுமாவார்.

விமானப்படைக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் இருந்து ஏற்கனவே மூன்று ''வை 12'' (சகடை) விமானங்கள் சீனாவிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டதாகவும் தளபதி குணவர்த்தனா சொன்னார்.

இப்போதைய யுத்தத்திற்காக புதிதாக விமானங்களை உடனடியாக வாங்கவேண்டும் என்ற அவசரம் இல்லை. எனினும் விமானப் படையை மேலும் பலமுள்ளதாக்குவதற்கே புதிய விமானங்களை வாங்க உள்ளோம். எங்களை நாங்களே தயார்ப்படுத்திக் கொள்வது அவசியம் தானே!

எனினும் நாட்டுக்கு கட்டுபடியாகக்கூடியதை விட மேலதிகமாக எதையும் விமானப் படை எதிர்பார்க்கவில்லை— என்றும் வடக்கு-கிழக்கு விமானப்படைத் தளபதி தெரிவித்திருக்கிறார். (அ)

## பிரச்சினைகள், தேவைகள் குறித்து
## திணைக்கள அறிக்கைகளை கோருகிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம், அக். 27

யாழ்-மாவட்டத்தில் உள்ள சகல அரச திணைக்களங்களும் தமது தேவைகள், பிரச்சினைகள் குறித்து விவரமான அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு யாழ்- அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் கோரியுள்ளார்.

நேற்று செயலகத்தில் நடைபெற்ற திணைக்களத் தலைவர்களின் கூட்டத்தில் சகல திணைக்கள தலைவர்களும் கலந்துகொண்டனர்.

மேற்படி அறிக்கைகளை உடன் சமர்ப்பித்தால் அது தொடர்பாக கொழும்பில் உள்ள திணைக்கள உயர் மட்டத்துடன் தாம் நேரடியாகத் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அரச அதிபர் அங்கு தெரிவித்தார். (ஓ-3)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னம்மா செல்வநாயகம்

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சின்னம்மா செல்வநாயகம் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. இ. செல்வநாயகத்தின் மனைவியும், சுந்தரி, சோமா, திருச்செல்வம், திலகவதி ஆகியோரின் தாயாரும், சறாதாமோதரம், Nash, விவியன், சிறிகாந்தா ஆகியோரின் மாமியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கண்டியில் நடைபெற்றது.

தகவல்:
திருமதி சுந்தரி தாமோதரம்
தாமோதரம் வீதி,
சாவகச்சேரி.
(14569)

### R. குருசுமுத்து

ஊறணி - காங்கேசன்துறையைச் சேர்ந்த திரு. R. குருசுமுத்து (Clerk - Paranthan Chemicals Corporation) அவர்கள் 24 - 10 - 90 அன்று காலமானார். அன்னாரின் இறுதிச் சடங்கு 24-10-90 புதன் கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், சக ஊழியர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
போயிட்டி,
இளவாலை.
(14573)

### திருமதி சரஸ்வதி கணவதிப்பிள்ளை

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி கணவதிப்பிள்ளை 25-10-1990 அன்று காலமானார். அன்னார் செல்லர் கணவதிப்பிள்ளை [குழந்தை, ஓய்வு பெற்ற தபால் ஊழியர்] யின் அன்பு மனைவியும், திருமதி கௌசலாதேவி, சிவநாதன் [கைத்தொழில் பேட்டை அச்சுவேலி], சண்முகநாதன் [சைவம், ஜேர்மனி], செல்வகாந்தன் [முன்னாள் பொலீஸ் உத்தியோகத்தர் தற்போது ஜேர்மன்], சுபத்திராதேவி [கனடா], சுசிலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், செ.ஞானசேகரம்பிள்ளை [மின் அத்தியட்சகர் தெல்லிப்பழை], திருமதி ஞானமணி, திருமதி புனிதராணி, [ஆசிரியை யாழ். கன்னியர்மடம்], திருமதி நளாயினி [ஜேர்மனி], நா. சாம்பசிவம் [கனடா]. பொ. காந்தராஜா [கனடா] ஆகியோரின் அன்பு மாமியாரும், தட்ஷாயினி, [யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவி], விஜிதா, கவிதா [புனித திரேசா மகளிர் பாடசாலை மாணவிகள், அச்சுவேலி], பவித்திரா [ஜேர்மன்], தாஷாந், பிராஷாந், சஞ்ஜீவன்[கனடா], ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அச்சுவேலியில் 26-10-1990 வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

தகவல்:
க. சிவநாதன் [மகன்]
'சரஸ்வதி பவனம்'
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.
[14570]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27 - 10 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கலந்துரையாடல்

யாழ் மாவட்டத்திலுள்ள கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், கொத்தணிஅதிபர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் ஆகியோருக்கும் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்துக்கும் இடையிலான கலந்துரையாடல்களுக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வடமராட்சி கோட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியிலும், பண்டத்தரிப்பு கோட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு அதேதினம் பிற்பகல் 3.00 மணியளவில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் —

யாழ். கோட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், மருதனாமடம் கோட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அதேதினம் பிற்பகல் 3.00 மணியளவில் மருதனமடம் இராமநாதன் கல்லூரியிலும் கலந்துரையாடல்கள் நடைபெறும்.

மாவீரர் நிர்வாகச் செயலகப் பொறுப்பாளரும், வி. பு. ம. முன்னணியின் மாணவர் இயக்கத்தினரும், மாதிரி நிர்வாகச் செயலகத்தினரும் இதற்கான அழைப்பை விடுத்துள்ளனர். (ஓ-6)

## இன்றைய எழுச்சி விழா

வலிகாமம் பிரதேச முதலுதவி நிலையங்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் மாபெரும் தேசிய எழுச்சி விழா இன்று காலை 9 மணிக்கு நல்லூர் ஸ்தான சீ. சீ. த. க. பாடசாலையில் (சாதனா) நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகரான திரு. மூர்த்தி, கல்வி அதிகாரி திரு. ச. சுப்பிரமணியம் ஆகியோரும் விழாவில் கலந்து கொள்ள உள்ளனர். (ஓ-5)

## டிசம்பர் வரை செல்லுபடி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் கடந்த ஜூன் மாதத்திற்குப் பின்னர் வழங்கப்பட்ட காசோலைகள் யாவும் இவ்வருடம் டிசம்பர் 31 ஆம் திகதிவரை செல்லுபடியாக்கப்பட்டுள்ளன.

இது [illegible] பல்கலைக்கழக நிர்வாகத்தினர், [illegible] வங்கிக் கிளைகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

## காணாமற்போன 33 பேரின் விவரம் செஞ்சிலுவையிடம்

காங்கேசன்துறை, மயிலிட்டி, தையிட்டி ஆகிய பகுதிகளில் இராணுவத்தினரிடம் சிக்குண்டிருக்கலாம் என நம்பப்படும் பொதுமக்களில் 33 பேரின் பெயர் விவரங்கள் நேற்று அவர்களது உறவினர்கள் மற்றும் பொது அமைப்புக்களினால் யாழ். செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டன.

(தையிட்டி கலைமகள் வீதி, கலைவாணி வீதி, கேசரி வீதி, சேகரம் வீதி முருத்தன் குறிச்சி ஆகிய இடங்களைச் சேர்ந்த 22 பேரின் விவரங்களும்-

மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறையைச் சேர்ந்த 11 பேரின் பெயர் விவரங்களுமே நேற்றுக் கையளிக்கப்பட்டன.

இதேவேளை தையிட்டிப் பகுதியில் சுமார் 48 பேர் சிக்கியுள்ளனர் என்று சம்பந்தப்பட்டவர்களது உறவினர்கள் தெரிவிக்கின்றனர். (ஓ-3-5)

## படகு சேதமானதாகத் தகவல்

யாழ்ப்பாணம், அக். 27

''நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) காலை 5-30 மணியளவில் வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றுக் கடற்பிரதேசத்தில் ரோந்து சென்ற கடற்படைப் படகு ஒன்று எமது கடற்கண்ணியில் சிக்கி வெடித்ததில் படகு பலத்த சேதத்திற்கு உள்ளாகியது. அதிலிருந்த பல படையினர் கொல்லப்பட்டனர்.''

விடுதலைப் புலிகளினால் நேற்று விடுத்த தகவற் குறிப்பு ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாவீரர் மயானத்தில் தகனம்

வலிகாமம் வடக்கில் இடம்பெற்ற மோதல்களின்போது வீர மரணமடைந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் நால்வரின் புகழுடம்புகள் நேற்று மாலை கோப்பாயில் உள்ள மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாயின.

மேஜர் ஹென்றி (ஏகாம்பரம் பன்னீர்ச்செல்வன்-புங்குடுதீவு), சேரன் (பெருமாள் நாகேந்திரம்-யாழ்ப்பாணம்), திலீப் (அப்புக்குட்டி வரதன்-ஊரெழு வடக்கு). வெற்றி (சோமசுந்தரம் சுதாகரன் - சுழிபுரம்மேற்கு) ஆகியோரின் புகழுடம்புகளே நேற்று தீயுடன் சங்கமமாயின.

பெரும் திரளான மக்கள் இறுதி ஊர்வலம் மற்றும் அஞ்சலி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

அரியாலைப் பிரதேசப் பொறுப்பாளர் பசீன் அஞ்சலி உரை நிகழ்த்தினார்.

## 4 ஆம் திகதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே கால எல்லையை நீடிப்பது என முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் உதவி அரசாங்க அதிபர்கள், கூட்டுறவுத்துறை அதிகாரிகள், ப. நோ. கூ. சங்கத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-3)

## நோர்வே...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பிரஸ்தாப அதிகாரிகள் மூவரும் அந்தந்த நாடுகளில் இருந்து வந்திருக்கின்றனர்.

இங்குள்ள நிலைமைகளை இவர்கள்நேரில் சென்றுபார்ப்பதுடன், பாதிக்கப்பட்ட மக்கள்மற்றும்பொது-தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளிடமும் விவரங்களை கேட்டறிந்து கொள்வர். நிவாரணம் வழங்குவது, உடனடித் தேவைகள் என்பன குறித்தும் ஆராய்வர்.

நோர்வே றெட்பானாவைச் சேர்ந்த திரு. ஜக்ஊப், திரு. சிக்மென், பிரிட்டனின் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த திரு டேவிற் சியரோன் ஆகியோரே இங்கு வந்துள்ள அதிகாரிகள் ஆவர்.

இவர்கள் இங்குள்ள சில அகதி முகாம்களுக்குச் சென்று, அங்கு நடைபெற்று வரும் நிவாரண வேலைகளையும் நேற்றுப் பார்வையிட்டனர். [ஓ-5)

## அமெ. உதவி

கொழும்பு, அக். 27

இரண்டு கோடி ரூபா பெறுமதியான மருந்து வகைகளையும் வைத்திய உபகரணங்களையும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு என்று அமெரிக்கா நன்கொடையாக வழங்கியுள்ளது.

சண்டை காரணமாக பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணமக்களினதும் முகாம்களில் உள்ள அகதிகளினதும் தேவைகளைப் பூர்த்திசெய்ய இந்த உதவிகள் பயன்படுத்தப்படும்.

## ஸ்ரீலங்கா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நடவடிக்கை எடுப்பதாகவும் நாட்டில் விரைவில் இயல்பு நிலையை ஏற்படுத்த தீவிரமாக அரசு செயல்படும் என்றும் பிரதமர் டி. பி. விஜேதுங்க கூட்டத்தில் உறுதி அளித்ததாகவும் —

அதனைத் தொடர்ந்து 4ஆயிரம் கோடி ரூபாவை இலங்கைக்குக் கடனாக வழங்க இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாகவும் ஏஜென்ஸிச் செய்திகள் தகவல் வெளியிட்டன.

இக்கூட்டத்தில் 16 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (ஓ-எ)

## மரண அறிவித்தல்

### நாகேசு முருகேசம்பிள்ளை

வட்டு மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நாகேசு முருகேசம்பிள்ளை 26 - 10 - 90 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்ற நாகேசு-அன்னம்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும், நாகமணி-மாணிக்கம் தம்பதியினரின் மருமகனும் அட்டலட்சுமியம்மாவின் அன்புக் கணவரும், சண்முகராசா, சத்தியபாலன், சுந்தரலிங்கம் (நோர்வே), சந்தனராசா, சந்திரவதனி, சரோசவதனிஆகியோரின் அன்புத் தந்தையும், புவிவீரசிங்கம், உலகானந்தன் (நோர்வே), மங்கையர்திலகம், கலைச்செல்வி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்;
சண்முகராசா
வட்டுக்கோட்டை.
(14267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org